**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 149** **நாள்: 11.09.2024**

**அடையாறு மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி இந்து மயானபூமியின் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், பொதுமக்கள் பாரதி நகர், பாலகிருஷ்ணாபுரம் மற்றும் புழுதிவாக்கம் எரிவாயு மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, தெற்கு வட்டாரம், அடையாறு மண்டலம், வார்டு-172, குருநானக் கல்லூரி அருகில் அமைந்துள்ள வேளச்சேரி இந்து மயான எரிவாயு தகனமேடையில் பழுது சரிபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், 12.09.2024 முதல் ஒரு மாதக் காலத்திற்கு மேற்கண்ட மயானபூமியில் எரிவாயு தகனமேடை இயங்காது.

எனவே, வேளச்சேரி இந்து மயானபூமியில் எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் வேளச்சேரி தரமணி சாலையில் அமைந்துள்ள பாரதி நகர் எரிவாயு மயானபூமி, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட பாலகிருஷ்ணாபுரம் எரிவாயு மயானபூமி மற்றும் பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட புழுதிவாக்கம் எரிவாயு மயானபூமிகளை தகனம் செய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**